முருகப்பெருமான் துணை

**மகான் பொய்கை ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.09.2023**, செவ்வாய்கிழமை

1. தவமிக்க அவதாரம் கொண்ட
   தயவான ஆறுமுக ஞானியே
   அவதார உன் மகிமை அருளி
   ஆழ்வார் பெருமக்களும் அறிவுரை ஆசி
2. ஆசிதனை ஞானிகளை தொடர்ந்து
   அறிவிப்போம் அரங்கன் பலம் உலகறிய
   நேசமுடன் பொய்கை ஆழ்வாரும்
   நிலமதனில் சோபகிருது யாளி திங்கள்
3. திங்களிலே மூவாறோர்திகதி குசன்வாரம்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 19 ம் நாள், 05.09.2023, செவ்வாய்கிழமை)
   தேசிகனார்க்கு இனிதே உரைப்பேன்
   ஓங்கார ஞானியாக வாழும்
   ஓங்கார குடில்படைத்த அரங்கன்
4. அரங்கன் அவதாரம் என்பது
   அகிலம் தனை ஞான உலகாக்க
   வரங்கள் தரும் பிறவியாக இருக்க
   வணங்கி மக்கள் அரங்கனை
5. அரங்கனை நாடிவந்து ஆசியும்
   ஆற்றல்மிக்க தீட்சையும் பெற
   வரங்களாக மாறி வருவோர்கள்
   வேண்டல் வெற்றியாகும்படி மாற்றம்
6. மாற்றம் மிகுதி காண்கும்
   மாதரும சக்தி வடிவானஅரங்கன்
   ஆற்றல் கிட்ட வரும் மக்களுக்கு
   அறிவுத் தெளிவு திடம் ஆகி

7. ஆகியே தரும சேவை ஆற்றும்
அளவிலா உயர்குணம் பெருகி
அகிலத்தில் வருங்காலம் தனில்
அரங்கன் அவதார நோக்கம்
8. நோக்கம் பூர்த்தி ஆகும்படி
நிலமதனில் உயர் சேவை ஆற்றி
தேக்கமின்றி தேசம் எங்கிலும்
தேற்றுவர் தெய்வ நெறிகாட்டி
9. காட்டியே உலகோரை மாற்றி
கருணைபட வாழவகை செய்து
வாட்டமற ஞானவாழ்வாக்கி
வந்த நோக்கம் மாறா வண்ணம்
10. வண்ணமுடன் அனைவரும் தேறி
வையகத்தில் ஞானிகள் ஆவர்
எண்ணம் வழி சகலவகை தேறி
எங்கும் ஞானவான்கள் நிரம்ப
11. நிரம்பவே ஞான ஆட்சிதனை
நிலவுலகில் படைத்து சிறப்பர்
வரம்தரும் அரங்கனால் தேற்றம்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–